பக்கங்கள்: 09

# காலைக்கதிர்

Kalaikkathir

விடியல் 09 வள்ளுவர் ஆண்டு 2056 ஆனி 06 வெள்ளிக்கிழமை 20.06.2025 கதிர் 223

## இது ரகசியம் அல்ல!

வடக்கில் சுமார் 6 ஆயிரம் ஏக்கர் காணி அரசுடமையாக்கப்படும் வர்த்தமானி அறிவித்தலை எதிர்த்து தமிழ் அரசுக் கட்சியின் செயலாளர் சுமந்திரன் தாக்கல் செய்த ☞ 2

## பேருவளை நகர சபை உருவாக்கம் நீதிமன்ற தலையீட்டால் நிறுத்தம்

பேருவளை நகர சபையின் உருவாக்கம் நீதிமன்ற உத்தரவை அடுத்து தற்காலிகமாக நிறுத்தப்பட்டது. ஐக்கிய மக்கள் சக்தி தாக்கல் செய்த மனுவைத் தொடர்ந்து நீதிமன்றம் இதற்கான உத்தரவைப் பிறப்பித்தது.

ஐக்கிய மக்கள் சக்தியின் 6 உறுப்பினர்களில் 4 பேர், கூட்டம் குறித்த அதிகாரப்பூர்வ அறிவிப்பு தமக்குக் கிட்டவில்லை என்றுகூறி, நீதிமன்றத்தின் சட்டத் தலையீட்டை நாடினர்.

அனைத்து உறுப்பினர்களுக்கும் முறையான அறிவிப்பு வழங்கப்பட்ட பின்னரே பிரதேச சபை உருவாக்கத்தைத் தொடர முடியும் என்று மேல்முறையீட்டு நீதிமன்றம் தீர்ப்பளித்தது.

இதையடுத்து உள்ளூராட்சி ஆணையர் பேருவளை நகர சபை உருவாக்கம் ஒத்திவைக்கப்படுவதாக அறிவித்தார். சமீபத்திய உள்ளாட்சி தேர்தலில், பேருவளை நகர சபையில் சுயாதீன குழு 7 இடங்களையும், ஐக்கிய மக்கள் சக்தி 6 இடங்களையும், தேசிய மக்கள் சக்தி 3 இடங்களையும் வென்றன.

## முன்னாள் அமைச்சர் செய்த

# அரச காணி மோசடி தொடர்பில் நாடாளுமன்றில் தகவல் தெரிவிப்பு

முன்னாள் காணி பிரதி அமைச்சர் சாலிந்த திசாநாயக்க, 2000 ஆம் ஆண்டு நில சீர்திருத்த ஆணையத்திற்குச் சொந்தமான 76 ஏக்கர் நிலத்தை விவசாய அமைச்சிற்குக் குத்தகைக்கு எடுத்து, அதை ஹிரியால விவசாயிகள் நிறுவனத்திற்கு குத்தகைக்கு வழங்கினார், அதன் தலைவராக அவரது மனைவி இருந்தார், ஆனால் ஆளும்தரப்பு 25 ஆண்டுகளாக ஒரு சதம்கூட அந்த நிறுவனத்திடமிருந்து வாடகை பெறவில்லை என்று காணி மற்றும் நீர்ப்பாசன துணை அமைச்சர் சுசில் ரணசிங்க நாடாளுமன்றத்தில் தெரிவித்தார்.

ஹிரியாலநிறுவனத்திற்குநிலம்குத்தகைக்கு விடப்பட்டதாகக் கூறிய துணை அமைச்சர், நிலம் பொருளாதாரத்திற்கு பங்களிக்கவில்லை என்றும், அரசுக்குச்செலுத்த வேண்டியவரிகூடப் பெறப்படவில்லை என்றும் கூறினார்.

இருப்பினும் அரசு இந்த நிலத்தை மீண்டும் கையகப்படுத்தப்படுவதில் சிக்கல் இருப்பதால், இந்த விவகாரம் குறித்துஆராயஒருகுழுநியமிக்கப்படும் என்றும் ரணசிங்க கூறினார்.

காணி ஆணையாளரின் ஒப்புதலுடன் நிலம் லங்கா புத்ரா வங்கியிடம் அடமானம் ☞ 2

## இஸ்ரேலில் இருந்தும் இலங்கையர்களை அழைப்பது குறித்து நாடுகளுடன் பேச்சு

### அயலுறவுத்துறை அமைச்சர் தெரிவிப்பு

இஸ்ரேலில் போர் நிலைமை மேலும்மோசமடைந்தால்,அருகிலுள்ள நாடுகளுக்குவிமானங்களைஅனுப்பி அங்குள்ள இலங்கையர்களை அழைத்து வருவது குறித்து ஏற்கனவே பேச்சு நடத்தப்பட்டதாக அயலுறவுத்துறைமற்றும்வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சர் விஜித ஹேரத் நேற்று நாடாளுமன்றத்தில் தெரிவித்தார். ☞ 6

## கெஹலிய, மனைவி, மகள் பிணையில் வெளியேறினர்

### மற்றொரு மகள் சிறையில்

பணமோசடி தடுப்புச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்ட முன்னாள் அமைச்சர் கெஹெலிய ரம்புக்வெல்லவின் இரண்டு மகள்கள் மற்றும் மருமகனுக்கு இன்று கொழும்பு தலைமை நீதவான் தனுஜா லக்மாலி ஜெயதுங்க பிணை வழங்கினார். முன்னதாகபிணைவழங்கப்பட்டும் நிபந்தனைகளைப் பூர்த்தி செய்யத காரணத்தால் விளக்கமறியலில் வைக்கப்பட்ட ஹெகலிய, அவரது மனைவி மற்றும் மகள் ஆகியோர் நேற்று பிணையில் வெளியே வந்தனர். எனினும் நேற்றுக் கைது செய்யப்பட்ட மற்றொரு மகள் பிணை நிபந்தனையைப் பூர்த்தி செய்யாத காரணத்தால் அதிகாரிகளால் சிறைக்கு அழைத்துச் செல்லப்பட்டார்.

சமித்ரி ஜனனிகா ரம்புக்வெல்லவே பிணை நிபந்தனைகளை பூர்த்தி செய்யத் தவறியதால் சிறைக்குச் சென்றார்.

முன்னாள் அமைச்சரின் இரண்டு மகள்கள் மற்றும் மருமகன் ஆகிய மூன்று சந்தேகநபர்களையும்லஞ்சஒழிப்புஆணையகம் கைது செய்து நீதிமன்றில் முற்படுத்தியபோது, மேலும் கொழும்பு தலைமை நீதிவான் தனுஜா லக்மாலி ஜெயதுங்க மூவருக்கும் பிணை வழங்கினார்.

சந்தேகநபர்களான அமலி நயனிகா ரம்புக்வெல்ல மற்றும் மருமகன் இசுரு புலஸ்தி ஆகியோர் பிணை நிபந்தனைகளைப் பூர்ததி செய்து வெளியேறியபோதிலும், சந்தேகநபரான ஜனனிகா ரம்புக்வெல்லவால் பிணை நிபந்தனையைப் பூர்த்தி செய்ய முடியவில்லை.

சந்தேகநபர்களுக்கு தலா 50,000 ☞ 6

# மனிதப் புதைகுழி இருக்குமிடங்களுக்கு ஐ.நா. ஆணையாளர் செல்லவேண்டும்

## மாற்றுக்கொள்கைக்கான மையம் அழுத்தம்

இலங்கைக்கு வருகை தரும் ஐக்கிய நாடுகள் மனித உரிமை ஆணையாளர் வோல்க்கெர் டேர்க் மனித புதைகுழிகள் காணப்படும் பகுதிகளிற்கும் சென்று பார்க்கவேண்டும். தொடரும் காணி அபகரிப்புகள் குறித்து கரிசனையை வெளியிடவேண்டும் பயங்கரவாத தடைச்சட்டத்தின் பயன்பாட்டினை உடனடியாக நிறுத்துமாறு வேண்டுகோள் விடுக்கவேண்டும் என மாற்றுக்கொள்கைகளிற்கான நிலையம் வேண்டுகோள் விடுத்துள்ளது.

இலங்கைக்குஉத்தியோகபூர்வபயணமாக வருகை தரும் ஐக்கிய நாடுகள் மனித உரிமைஆணையாளருக்கு இலங்கையின் மாற்றுக்கொள்கைகளிற்கான நிலையம் 12 பரிந்துரைகளை சமர்ப்பித்துள்ளது.

இது குறித்து மாற்றுக்கொள்கைகளிற்கான நிலையம் விடுத்த அறிக்கையில் தெரிவித்துள்ளதாவது:

ஐக்கியநாடுகளின் மனித உரிமை ஆணையாளர் வோல்க்கெர் டேர்க் இம்மாதம் இலங்கைக்கு விஜயம் மேற்கொள்ளவுள்ளார்.

2024 தேர்தல்களின் மூலம் அநுரகுமார திசநாயக்க ☞ 2

## அரசு மீது நம்பிக்கையிழந்து விட்டோம் காணாமற்போனோரின் உறவுகள் கதறல்



எங்கள் பகுதியில் அடிக்கடி காணப்படும் புதைகுழிகள் பற்றி அறியும்போது நாங்கள் மன அழுத்தத்தில் இருக்கிறோம். இந்த புதைகுழிகள் அகழ்வாராய்ச்சி சர்வதேச விதிகள் மற்றும் விதிமுறைகளின்படியும், சர்வதேச சமூகத்தின் மேற்பார்வையின் கீழும் செய்யப்பட வேண்டும் என பிரித்தானிய தூதுவரிடம் வலியுறுத்திய வடக்கு கிழக்கு வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட உறவுகள் சங்கத்தின் பிரதிநிதிகள்,

இலங்கை அரசாங்கத்தின் மீது நாங்கள் நம்பிக்கையை இழந்துவிட்டோம் - என தெரிவித்தனர்.

இலங்கைக்கான பிரித்தானிய தூதுவர் அன்ட்ரூ பற்றிக் யாழ்ப்பாணத்திற்கு விஜயம் செய்து பல்வேறுபட்ட சந்திப்புக்களில் ஈடுபட்டு வருகிறார். இதனொரு அங்கமாக வடக்கு கிழக்கு ☞ 2

## ஈரானில் இருந்து இலங்கையரை வெளியேற்ற இந்தியாவின் உதவி

### நாடுகின்றது கொழும்பு

ஈரானுக்கும் இஸ்ரேலுக்கும் இடையே அதிகரித்து வரும் பதற்றங்களைக் கருத்தில் கொண்டு, ஈரானில் உள்ள இலங்கையர்களின் பாதுகாப்பை உறுதி செய்வதற்காக இலங்கை அரசு கடந்த பல நாட்களாக தீவிரமாக செயல்பட்டு வருகிறது.

இலங்கையர்களை வெளியேற்றுவதற்கானஉதவியை இலங்கை அயலுறவுத்துறை அமைச்சகம் கொழும்பில் உள்ள இந்திய உயர் ஆணையரகம் மூலம் இந்திய அயலுறவுத்துறை அமைச்சைத் தொடர்பு கொண்டுள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

எல்லை தாண்டுதல் ☞ 2

## போலி மருந்து இறக்குமதி விவகாரம்; மருந்துகளில் நச்சு 'பாக்டீரியா' இருந்தது

### நீதிமன்றத்தில் அரசுத் தரப்பு எடுத்துரைப்பு

இலங்கைக்கு இறக்குமதி செய்யப்பட்ட நரம்பியல் நோய்களுக்குப் பயன்படுத்தப்படும் 'இம்யூனோகுளோபுலின்' மருந்துகளில் ஆபத்தான நச்சு 'பாக்டீரியா-' மாசுபட்ட நீர் இருந்தது என்பது உலக சுகாதார நிறுவனத்தின் அங்கீகாரம் பெற்ற ஜெர்மன் ஆய்வகத்தில் கண்டறியப்பட்டதாகவும், புற்றுநோயாளர்களுக்கான மருந்தான 'ரிட்டுக்ஸிமாப்' ஆன்டிபாடிதடுப்பூசியின்ஒருதொகுதியில்உப்புக்கரைசல் ☞ 6

## சர்வதேச நிலைமைகளை சரிவரக் கணித்து செயற்படாவிட்டால் விளைவு பாராதூரமாகும்

### ஐ.தே.க. தலைவர் வஜிர ஆளும்தரப்புக்கு எச்சரிக்கை

சர்வதேசநிலைமையை ஆளும் தரப்பு முறையாகக் கண்காணித்து, செயல்படாவிட்டால், இலங்கைகுடிமக்களும் கடுமையான விளைவுகளைச் சந்திக்க நேரிடும் என்று ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் வஜிர அபேவர்தன தெரிவித்தார்.

காலி, உலுவிடிகேயில் உள்ள ஐக்கிய தேசியக் கட்சியின் மாவட்ட அலுவலகத்தில் செய்தியாளர்களைச் சந்தித்தபோது இதனைத் தெரிவித்தார்.

சர்வதேச மற்றும் ஆசிய நாடுகளைப் பற்றி நல்ல அறிவைக் கொண்ட ஒரு தலைவரின் ☞ 2

## இனி இது .....

வழக்கு இன்று மீண்டும் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்படுகின்றது.

இந்த வர்த்தமானி அறிவித்தலின்படி அறிவிக்கப்பட்ட காணிகள் அனைத்தும் அரசுடமையாவதற்கு இன்னும் 8 நாட்கள் மட்-டுமே எஞ்சியிருக்கின்றன. மார்ச் 28 அந்த அறிவித்தல் விடுக்கப்பட்டது. ஜூன் 28 அதன் மூன்று மாத காலக்கெடு நிறைவடைகின்றது. இதற்கிடையில் அந்த வர்த்தமானி அறிவித்தலின் மீது தடை உத்தரவு பெறப்படவில்லை என்றால், வர்த்தமானியில் குறிப்பிடப்பட்ட காணிகள் அனைத்தும் அரசுடமையாக்கப்படும் ஆபத்து பெருமளவில் உண்டு.

காணிகளை அரசுடமையாக்கும் இந்த நடவடிக்கையை இடைநிறுத்தியுள்ளதாக ஆளும்தரப்பு அறிவித்திருந்தது. ஆனாலும், சட்டத்தில் அதற்கு இடமில்லை என்பதால், ஆளும்தரப்பின் அறிவிப்பையும் மீறி காணிகள் ஜூன் 28இன் பின்னர் அரசுடமையாக்கிவிடும் என்ற ஆபத்து உண்டு.

இதற்கெதிராக சட்டப் போராட்டத்தையும் அறப் போராட்டத்தையும் ஒருங்கே நடத்தப் போவதாக தமிழ் அரசுக் கட்சி ஏற்கனவே அறிவித்தது. தேர்தல் நேரத்தில் இதுவொரு மிக முக்கிய பிரச்சினையாக மேற்கிளம்பி வந்தது. உடனடியாக அதனை அடக்கும் விதத்தில் ஆளும்தரப்பினர், வர்த்தமானி அறிவித்தல் மீளப்பெறப்படும் என்று அறிவித்தனர். அது தொடர்பான முடிவு அமைச்சரவையில் எட்டப்பட்டதாகவும் பகிரங்கமாகத் தெரிவிக்கப்பட்டது. ஆனால், பின்னர் வழக்கம்போலவே எல்லா ஆளும்தரப்பினரும் இதுவரையில் செய்து வந்ததைப் போலவே அதிகாரிகளின் பின்னால் சென்று இந்த ஆட்சியாளர்களும் பதுங்கிக்கொண்டனர். சிங்கள உயரதிகாரிகள் என்போர் சிங்கள பௌத்த பேரினவாதப் பொறிமுறையின் காவலர்கள். எனவே ஆளும்தரப்பின் முடிவை அரசியல் முடிவு என்று அவர்கள் எதிர்க்கிறார்கள்.

நாட்டின் மற்றைய பகுதிகளில் எல்லாம் செல்லுபடியாகக்கூடிய ஒரு சட்டம் வடக்கு கிழக்கில் மட்டும் எப்படிச் செல்லுபடியாகாது, அதுவென்ன தனிநாடா என்று கேள்வி எழுப்புகின்றார்கள். இந்த பௌத்த சிங்கள சிந்தனைவாதத்திற்கு மயங்கி, பயந்து போகும் ஆளும்தரப்பினர் பின்னர் தமது வாக்குறுதிகளில் இருந்து பின்வாங்குகின்றனர் என்பது மிகத் தெளிவாகத் தெரிகின்றது. ரணில் விக்கிரமசிங்கவின் ஆட்சிக் காலத்திலும் இதுவே நடந்தது. அரசியல் கைதிகளை விடுவிக்கவேண்டும் என்ற ரணிலின் அரசியல் முடிவை அப்படியே செயற்படுத்துவதற்கு பௌத்த சிங்கள பேரினவாத அதிகார வர்க்கம் கடைசிவரை அனுமதிக்கவில்லை. அவர்களின் எதிர்ப்புக்கு அஞ்சிய ரணிலும் அவரது ஆளும்தரப்பினரும் அவர்களைக் கைகாட்டிவிட்டு மெல்ல நழுவிக்கொண்டனர். இப்போது அநுரவின் முறை. அவரும் அதேபோன்றுதான் நடந்துகொள்கின்றார்.

சுமந்திரன் தாக்கல் செய்த வழக்கு கடந்த திங்கட்கிழமை உயர் நீதிமன்றத்தில் விசாரணைக்கு எடுக்கப்பட்டபோது ஆளும்தரப்பினர் முன்வைத்த விளக்கம் அதையே பட்டவர்த்தமாக எடுத்து விளக்கியது. பொதுநன்மைக்காக உயர் நீதிமன்றத்தில் சுமந்திரனால் தாக்கல் செய்யப்பட்ட இந்த வழக்கில், அரச தரப்பில் முற்பட்ட சட்டத்தரணி ஆளும்தரப்பு ஏற்கனவே வழங்கிய வாக்குறுதியை நீதிமன்றத்தில் முன்வைத்து, காணி அரசுடமையாக்கல் வர்த்தமானி மீளப்பெறப்படும் என்ற வாக்குறுதியை நீதிமன்றுக்கு வழங்கவில்லை. ஆளும் தரப்பு பகிரங்கமாக அறிவித்து ஏற்றுக்கொண்ட ஒரு விடயத்தை நீதிமன்றத்தில் முன்வைக்க ஆளும்தரப்பு முன்வரவில்லை.

அதாவது வர்த்தமானியை மீளப் பெறுவதாக வழங்கப்பட்ட வாக்குறுதி மக்களை ஏமாற்றுவதற்கும் அது தொடர்பில் எழுந்த போராட்ட அழுத்தங்களை நீர்த்துப் போகச் செய்யவுமாகத் தெரிவிக்கப்பட்டதே தவிர, ஆளும்தரப்பின் உண்மையான நிலைப்பாடல்ல என்பதைத்தான் நீதிமன்றத்தில் அது முன்வைத்த வாதம் எடுத்தியம்பியது. இந்த விடயத்தில் அமைச்சரவையின் அனுமதியையும் பெற்ற பின்னரே நீதிமன்றுக்குத் தாம் அது குறித்து அறிவிக்க முடியும் என்று அரச சட்டவாதி நீதிமன்றத்தில் தெரிவித்தார்.

உண்மையில் வர்த்தமானியை மீளக் கைவாங்குவதுதான் ஆளும்தரப்பின் நிலைப்பாடு என்றால், நீதிமன்றத்தில் அதனைத் தெரிவித்திருக்க முடியும். வர்த்தமானியை மீளக் கைவாங்கும் உத்தியோகபூர்வ வர்த்தமானி இந்தத் திகதியில் வெளியிடப்படும் என்று தெரிவிக்கப்பட்டிருந்தால் அத்துடன் இந்த வழக்கு ஓய்வுக்கு வந்திருக்கும். ஆனால் ஆளும்தரப்பில் அத்தகைய உறுதிமொழி எதுவும் நீதிமன்றுக்கு வழங்கப்படவில்லை.

இதனால் அமைச்சரவையின் முடிவை அறிந்து நீதிமன்றுக்குத் தெரிவிக்கும்படி கூறி இன்றைய தினத்திற்கு அந்த வழக்கை ஒத்திவைத்தது நீதிமன்றம். இன்றும் ஆளும்தரப்புப் பக்கமிருந்து என்ன பதில் வரப் போகின்றது என்று தெரியவில்லை. அப்படி ஒருவேளை சரியான பதில் வரவில்லை என்றால், இந்த வர்த்தமானி மீது இடைக்காலத் தடை விதிக்கும்படி முறைப்பாட்டாளர் கேட்டுள்ள நிவாரணத்தை நீதிமன்றம் வழங்கக்கூடும்.

என்பிபி ஆளும்தரப்பு என்னதான் தன்னை முன்னைய ஆட்சியாளர்களிலும் பார்க்க வேறுபட்டவர்கள் என்று பறைதட்டினாலும் தமிழர்கள் விடயத்தில் அவர்களும் ஒரே குட்டையில் ஊறிய மட்டைகள் தான் என்பதை இந்தச் சம்பவம் மிகத் தெளிவாக உணர்த்துகின்றது. என்பிபி மாற்றத்தைக் கொண்டுவந்துவிடும் என்று நம்பிய, நம்புகின்ற சிலருக்கு இந்த உண்மைகள் சமர்ப்பணம்.

**இடிமின்னல்**
(idiminnal@gmail.com)

## மனிதப்....

### (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஜனாதிபதியாக தெரிவு செய்யப்பட்ட பின்னர் தேசிய மக்கள் சக்தி ஆட்சிக்கு வந்த பின்னர் உயர் ஸ்தானிகர் ஒருவர் இலங்கைக்கு விஜயம் மேற்கொள்வது இதுவே முதல்தடவை.

இலங்கையில் நடந்துவரும் ஆட்சி மாற்ற பொருளாதா நெருக்கடிகளின் விளைவுகள் கடந்தகால வன்முறைகளின் சுழற்சி மூன்று தசாப்தகால மோதல்களின் நீடித்த விளைவுகள் ஆகியவற்றுடன் நாடு போராடிக்கொண்டிருக்கும் ஒரு தருணத்தில் இந்தப் பயணம் இடம்பெறுகின்றது.

2024 ஆளும்தரப்பு மாற்றம் சீர்திருத்தத்தை உறுதியளித்தது புதிய கலாசாரம் ஏற்படுத்தப்படும் என்ற நம்பிக்கையை மீண்டும் தூண்டியது. ஆயினும்கூட ஏழு மாதங்களுக்குப் பிறகும் நம்பிக்கையை வளர்க்கும் நடவடிக்கைகள் மற்றும் முக்கிய நிர்வாகம் மற்றும் சட்ட சீர்திருத்தங்களை செயல்படுத்துவதில் தாமதம் ஏற்பட்டுள்ளது.

சமூகத்தின் ஒரு குறிப்பிடத்தக்க பகுதியினர் கடுமையான சமூக-பொருளாதார சவால்களையும் எதிர்கொள்கின்றனர். இத்தகைய சூழலுக்கு மத்தியில் மனித உரிமை மீறல்கள் தொடர்கின்றன. பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தின் சமீபத்திய பயன்பாடு சந்தேக நபர்களின் உரிய செயல்முறையை மீறியுள்ளது.

நிலம் கையகப்படுத்துதல் போன்ற நீண்டகால பிரச்சினைகள் சமூகங்களுக்கு அவர்களின் நிலங்களை அணுகுவதற்கான உரிமை, சொந்தமாக்குதல் மற்றும் பயன்படுத்துவதற்கான உரிமை நடமாடும் சுதந்திரம் மற்றும் உயிர்வாழும் வழிமுறைகளை தொடர்ந்து மறுத்து வருகின்றன.

திசாநாயக்க ஆளும்தரப்பின் கீழும் சித்திரவதை மற்றும் காவல்நிலையத்தில் மரணங்கள் குறித்த தகவல்கள் வெளியாகியுள்ளன.

இலங்கையில் பாதிக்கப்பட்டவர்கள் உயிர் பிழைத்தவர்கள் மற்றும் சிவில் சமூகத்தினருடன் உண்மையான மற்றும் திறந்த உரையாடலை நடத்துங்கள் இதில் வடக்கு மற்றும் கிழக்கில் போரால் பாதிக்கப்பட்ட பகுதிகளைப் பார்வையிடுவதும் அடங்கும்.

பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தின் பயன்பாட்டை உடனடியாகத் தடைசெய்து அதை உடனடியாக ரத்துசெய்யவேண்டியதன் அவசியத்தை வலியுறுத்துங்கள். சட்ட சீர்திருத்தங்களுக்கான எந்தவொரு எதிர்கால முயற்சிகளும் சர்வதேச தரங்களுக்கு இணங்க வேண்டும் மற்றும் பரந்த ஆலோசனைகளுக்குப் பிறகு வரைவு செய்யப்பட வேண்டும்.

பொறுப்புக்கூறலிற்கு தீர்வைகாண்பதற்கான உறுதியான நடவடிக்கைகளிற்கான தேவைகள் குறித்து முன்னிலைப்படுத்துங்கள்

பல தனிநபர்களை சமூகங்களை தங்கள் நிலங்களில் இருந்து வெளியேற்றியுள்ள நிலங்களை கையகப்படுத்தல் ஆக்கிரமிப்பு குறித்து கரிசனைகளை எழுப்புங்கள். வடக்குகிழக்கில் நிலம் கையகப்படுத்தல் குறித்து விசேட கவனம் செலுத்தப்படவேண்டும்.

மனித புதைகுழிகள் காணப்படும் பகுதிகளிற்கு விஜயம் மேற்கொண்டு புதைகுழிகளை தோண்;டுவது ஆவணப்படுத்துவது அறிக்கையிடுவது அடையாளம் காண்பது போன்ற விடயங்களில் சர்வதேச தராதரம் பயன்படுத்தப்படுவதன் அவசியத்தை வலியுறுத்துங்கள்.

மனித உரிமைகள் பொறுப்புக்கூறல் நல்லிணக்கத்தினை தொடர்ச்சியாக கண்காணிக்கும் ஆதரிப்பதற்கான ஆணையை வழங்கும் புதிய தீர்மானத்திற்கான தேவை குறித்து பேசுங்கள் - இந்த தீர்மானம் இரண்டு வருடகாலத்திற்கானதாகயிருக்கவேண்டும்.

ஐக்கிய நாடுகள் மனித உரிமை ஆணையாளர் அலுவலகம் இலங்கை குறித்த பொறுப்புக்கூறல் திட்டத்தினையும் இலங்கைக்கு விஜயம் மேற்கொள்வதற்கான அதன் திறனையும் புதுப்பிக்கவேண்டும் என மாற்றுக்கொள்கைகளிற்கான நிலையம் பரிந்துரைக்கின்றது

இந்த பரிந்துரைகளில் அடிக்கோடிட்டு காட்டப்பட்டுள்ள மனித உரிமைகள் பொறுப்புகூறல் நல்லிணக்க விவகாரங்கள் குறித்து அவசர கவனம் தேவை.

ஐக்கியநாடுகள் மனித உரிமை ஆணையாளரும் அவரது அலுவலகமும் மேலே குறிப்பிடப்பட்ட கரிசனைகளை முன்னிலைப் படுத்துவதற்கு இலங்கை விஜயத்தினை பயன்படுத்துவதுடன் சீர்திருத்தங்களை நடைமுறைப்படுத்துவதற்கான திட்டம் உட்பட உடனடி நடவடிக்கைகளை வலியுறுத்தவேண்டும் - என்றுள்ளது.

## ஈரானில்....

### (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சாத்தியமான இடங்களுக்கு இலங்கையர்கள் சென்றடைய முடிந்தால், இந்தச் செயல் முறையை ஆதரிக்க இந்தியா ஒப்புக் கொண்டதாகக் கூறப்படுகிறது. இது தொடர்பாக இருநாடுகளின் இராஜதந்திரிகளும் தொடர்பில் இருப்பதாக கூறப்படுகிறது.

இதற்கிடையில், இந்தியா ஏற்கனவே 'ஆபரேஷன் சிந்து'வின் கீழ் தனது குடிமக்களை வெளியேற்றத் தொடங்கியுள்ளது.

110 இந்திய மாணவர்களைக் கொண்ட முதல் குழு வடக்கு ஈரானில் இருந்து வெளியேற்றப்பட்டு, ஜூன் 17, 2025 அன்று எல்லையைத் தாண்டி ஆர்மீனியாவிற்கு வந்தது. அவர்கள் பின்னர் ஜூன் 19 அதிகாலையில் புதுடில்லிக்கு விமானம் மூலம் அழைத்துவரப்பட்டிருந்தனர்.

## சர்வதேச....

### (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தேவையை நாடு உணரும் நேரம் இதுதான் என்று அபேவர்தன கூறினார்.

உலகில் தற்போது போர்க்குணமிக்க சூழல் உருவாகி வருவதாகக் கூறிய அவர், 22 மில்லியன் இலங்கை மக்களை எவ்வாறு பாதுகாப்பது என்பது குறித்த பொறுப்பு ஆளும்தரப்பிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளதாகக் கூறினார்.

முன்னாள் அரசுத் தலைவர் ரணில் விக்கிரமசிங்க சர்வதேச நாணய நிதியத்துடன் சேர்ந்து எடுத்த பல முடிவுகள் தற்போது மாற்றப்பட்டு வருவதாகக் கூறிய அபேவர்தன, நாட்டை ஆட்சிசெய்வதில் மிகவும் கவனமாகச் செயல்படவேண்டியது அவசியம் என்றும் கூறினார்.

## அரச காணி ....

### (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வைக்கப்பட்டதாகவும், ஆனால் அந்த அடமானத்தில் எடுக்கப்பட்ட கடனை திருப்பிச் செலுத்தவில்லை என்றும் அவர் கூறினார். பின்னர் நிலம் வங்கிக்கு விற்கப்பட்டதாகவும் அவர் கூறினார்.

## அரசு மீது....

### (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வலிந்து காணாமலாக்கப்பட்டவர்களின் உறவுகள் சங்கத்தின் பிரதிநிதிகளையும் சந்தித்து கலந்துரையாடினார்.

சந்திப்பை தொடர்ந்து வலிந்து காணாமலாக்கப்பட்டவர்களின் உறவுகள் சங்கத்தின் பிரதிநிதிகளால் பிரித்தானிய தூதுவருக்கு மகஜரும் கையளிக்கப்பட்டது.

குறித்த மகஜரிலேயே இவ்விடயம் தெரிவிக்கப்பட் டுள்ளது.

குறித்த மகஜரில்,இலங்கையின் வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் இருந்து பலவந்தமாக காணாமல் போனவர்களின் குடும்பங்களாகிய நாங்கள், இலங்கை இராணுவத்தாலும் துணை இராணுவக் குழுக்களாலும் பலவந்தமாக காணாமல் போன எங்கள் அன்புக்குரியவர்கள் பற்றிய உண்மையை வெளிக்கொணரவும், அவர்களுக்கு சர்வதேச நீதியைப் பெறவும் 3,000 நாட்களுக்கும் மேலாகப் போராடி வருகிறோம்.

இலங்கையில் தமிழர்கள் வலுக்கட்டாயமாக காணாமல் போகச் செய்யப்படும் சம்பவங்கள் 1956 முதல் தொடர்ந்து நிகழ்ந்து வருகின்றன. இந்த நபர்கள் அனைவரும் தமிழர்கள் என்பதாலேயே காணாமல் போகச் செய்யப்பட்டனர்.

பலர் இராணுவக் கட்டுப்பாட்டுப் பகுதிகளில் கைது செய்யப்பட்டனர் அல்லது ஆயுதக் குழுக்களால் வெள்ளை வான்களில் கடத்தப்பட்டனர். அவர்கள் அனைவரும் வலுக்கட்டாயமாக காணாமல் போகச் செய்யப்பட்டனர்.

2009 ஆம் ஆண்டு போர் முடிவடைந்த பின்னர், அரசாங்கத்தின் பொய்யான வாக்குறுதிகளை நம்பி, எங்கள் அன்புக்குரியவர்கள் சரணடைந்தனர் அல்லது ஒப்படைக்கப்பட்டனர், பின்னர் வலுக்கட்டாயமாக காணாமல் போனார்கள். அவர்களில் 29 கைக்குழந்தைகள் மற்றும் குழந்தைகள் கூட பெற்றோருடன் சரணடைந்த பிறகு காணாமல் போனார்கள்.

போரின் முடிவில் சரணடைந்தவர்கள் அல்லது ஒப்படைக்கப்பட்டவர்கள் செல்வபுரம், முள்ளிவாய்க்கால், மாத்தளன் மற்றும் ஓமந்தை போன்ற இராணுவக் கட்டுப்பாட்டில் உள்ள சோதனைச் சாவடிகள் வழியாகச் சென்றனர். இந்த நபர்கள் நேரடியாக இராணுவத்தின் கட்டுப்பாட்டின் கீழ் நுழைந்தனர், மேலும் அவர்கள் நுழைந்ததற்கான பதிவுகள் உள்ளன. அந்த நேரத்தில் இந்த சோதனைச் சாவடிகளுக்குப் பொறுப்பான கட்டளை அதிகாரிகள் இன்னும் உயிருடன் உள்ளனர், மேலும் பலர் இன்னும் உயர் பதவிகளில் பணியாற்றி வருகின்றனர். முறையான விசாரணைகள் மூலம், சரணடைந்தவர்கள் எங்கு ஒப்படைக்கப்பட்டனர், யாருக்கு ஒப்படைக்கப்பட்டனர் என்பது பற்றிய உண்மையை வெளிக்கொணர முடியும்.

மேலும், 2017 ஆம் ஆண்டில், இலங்கை ஜனாதிபதியை மூன்று முறை சந்தித்த பிறகு, அரசாங்கம் எந்த நீதியையும் வழங்க விரும்பவில்லை என்பதை உணர்ந்த பிறகு, உள்நாட்டு நீதி வழிமுறைகளை இனி நம்பியிருக்க வேண்டாம் என்று முடிவு செய்தோம். அக்டோபர் 2017 முதல், நாங்கள் சர்வதேச நீதியை மட்டுமே கோரி வருகிறோம்.

இலங்கையின் உள்ளக விசாரணைகள் மற்றும் உள்நாட்டு வழிமுறைகளை நாங்கள் நிராகரிப்பதற்கான காரணங்கள் பின்வருமாறு:

1. இலங்கையின் அடுத்தடுத்து வந்த ஜனாதிபதிகள், போர்க்குற்றங்களில் ஈடுபட்டதாகக் குற்றம் சாட்டப்பட்ட இராணுவ வீரர்களைத் தண்டிக்க மாட்டோம் என்று வெளிப்படையாக அறிவித்துள்ளனர்.

2. தமிழர்களைப் படுகொலை செய்ததற்குப் பொறுப்பானவர்களைப் பாதுகாக்க சட்டமா அதிபர் துறை போன்ற அரசு நிறுவனங்கள் இரகசியமாகச் செயல்படுகின்றன. (உதாரணமாக: திருகோணமலை கடற்படைத் தளத்தில் கடற்படை அதிகாரிகளால் 11 மாணவர்கள் கடத்தப்பட்டு, மீட்கப்பட்டு, கொலைசெய்யப்பட்ட சம்பவம்.)

3. இலங்கையில் நீதிக்கான இரட்டைத் தரநிலைகள் இருந்தாலும் - தமிழர்களுக்கு ஒன்று, சிங்களவர்களுக்கு இன்னொன்று - மிருசுவிலில் ஒரு குழந்தை உட்பட எட்டு தமிழ் பொதுமக்களைக் கொன்றதற்காக சாட்சியங்களின் அடிப்படையில் சுனில் ரத்நாயக்க என்ற சிங்களவருக்கு மரண தண்டனை விதிக்கப்பட்டது, பின்னர் கோத்தபய ராஜபக்ஷவால் அவருக்கு ஜனாதிபதி மன்னிப்பு வழங்கப்பட்டு மீண்டும் பணியில் சேர்க்கப்பட்டார்.

இதுபோன்ற பல சம்பவங்கள் உள்ளன.

மார்ச் 2018 முதல், நாங்கள் ஜெனீவா அமர்வுகளில் பங்கேற்று, எங்கள் சாட்சியங்களை வழங்கி, எங்கள் கோரிக்கைகளை சர்வதேச சமூகத்தின் முன் வைத்து வருகிறோம். ஆரம்பத்தில் வாக்குறுதியளிக்கப்பட்ட ஷீஹிக்ஷியூளீ தீர்மானம் 30/1 எவ்வாறு நேரத்தை வாங்குவதற்காக கையாளப்பட்டது, இறுதியில் இலங்கை எவ்வாறு சர்வாதிகாரத்தை வெளிப்படுத்தும் வகையில் அதன் இணை அனுசரணையை வாபஸ் பெற்றது என்பது பரவலாக அறியப்படுகிறது. இதேபோல், உள்நாட்டு பொறிமுறை (நுனிஉண) சர்வதேச சமூகத்தை தவறாக வழிநடத்தவும் நீதியை நிறுத்தவும் சாதகமாக வடிவமைக்கப்பட்டது.

எங்கள் அன்புக்குரியவர்கள் காணாமல் போய் 16 ஆண்டுகள் ஆகின்றன. ஆனால் இதுவரை ஒரு நபர் கூட கண்டுபிடிக்கப் படவில்லை, நீதியும் கிடைக்கவில்லை.

தொடர்ச்சி 6ம் பக்கம்....

காலைக்கதிர்
Kalaikkathir

### மருந்துக் கொள்வனவு முறைமை தொடர்பில்

# சுகாதார நிபுணர்கள் சங்க தலைவர் அமைச்சர் நளிந்த மீது குற்றச்சாட்டு

உள்ளூர் மருந்து உற்பத்தியாளர்களிடமிருந்து மருந்துகளை வாங்கும் போது இரண்டு விலைக் குழுக்களைப் பராமரிப்பதன் மூலம் அரசுக்கு ஏற்படும் இழப்புகளைத் தடுக்க சுகாதார அமைச்சு ஏற்றுக்கொண்ட கொள்கையைதற்போதையசுகாதார அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ மாற்றியமைத்ததாக சுகாதார நிபுணர்கள் சங்கம் குற்றஞ்சாட்டியுள்ளது.

சுகாதார நிபுணர்கள் சங்கத்தின் தலைவர் ரவி குமுதேஷ் கொழும்பில் நேற்று செய்தியாளர்களிடம் இதனைத் தெரிவித்தார்.

இரண்டு விலைக் குழுக்களை நடத்த வேண்டாம் என்று அமைச்சரவை ஒப்புதல் அளித்தபோதிலும், அனைத்து மருந்து நிறுவனங்களுக்கும் இடையேயான போட்டியைத் தடுக்கும் வகையில், தொகுதிகளாக விலை நிர்ணயம் மூலம் அதிக விலையை பரிந்துரைக்க சுகாதார அமைச்சகம் இந்த நடவடிக்கையை எடுத்துள்ளதாக அவர் கூறினார். இந்த விஷயத்தில் உடனடியாக கவனம் செலுத்துவது ஆளும்தரப்பு மற்றும் சுகாதார அமைச்சரின் பொறுப்பு என்றும் அவர் கூறினார்.

அரசுக்கு ஏற்படக்கூடிய இழப்புகளைக் குறைக்க முன்னாள் சுகாதார அமைச்சர் ரமேஷ் பத்திரண அந்த நடவடிக்கையை எடுத்தார் எனவும், உள்நாட்டு மருந்து உற்பத்தியாளர்களை இரண்டு பகுதிகளாகப் பிரித்து, 'சூப்பர் பிரைஸ் கமிட்டி' மற்றும் வழக்கமான 'பிரைஸ் கமிட்டி' ஆகியவற்றைப் பராமரித்தார் எனவும் அவர் கூறினார்.

## நடிகர் மோகன்லால் நேற்று இலங்கை நாடாளுமன்றில்

இந்திய சினிமாவின் புகழ்பெற்ற நடிகரான மோகன்லால் நேற்று இலங்கை நாடாளுமன்றத்திற்கு வருகை தந்தார், இயக்குனர் மகேஷ் நாராயணனின் படத்தில் நடித்துவரும் அவர், இரண்டாம் கட்டப் படப்பிடிப்புக்காக இலங்கை வந்திருக்கிறார்.

நாடாளுமன்றத்தில் துணை சபாநாயகரால் வரவேற்கப்பட்ட நடிகர் மோகன்லால், பார்வையாளர் பகுதியிலிருந்து சபை அமர்வுகளைக் கவனித்தார். நாடாளுமன்ற உறுப்பினர்கள் பலர் அவரைச் சந்தித்து வாழ்த்துத் தெரிவித்தனர்.

## துமிந்தவின் மறியல் நேற்று மீண்டும் நீடிப்பு



கொழும்பு ஹேவ்லாக் டவுனில் உள்ள ஒரு அடுக்குமாடி குடியிருப்பில் தங்க முலாம் பூசப்பட்ட ரி - -56 துப்பாக்கி கண்டெடுக்கப்பட்டமை தொடர்பில் கைது செய்யப்பட்ட முன்னாள் அமைச்சர் துமிந்த திசாநாயக்கவின் விளக்கமறியல் காலம் ஜூன் 26 வரை நீடிக்கப்பட்டுள்ளது.

திசாநாயக்க நேற்றுக் காலை நீதிமன்றத்தில் முற்படுத்தப்பட்டார். அப்போது அவரது விளக்கமறியலை நீடித்து கல்கிஸ்ஸை நீதிவான் உத்தரவிட்டார்.

பயங்கரவாத புலனாய்வுப் பிரிவின் தொடர்ச்சியான விசாரணையின் ஒரு பகுதியாக அவர் முதலில் மே 23 அன்று கைது செய்யப்பட்டார். மறுநாள் விளக்கமறியலில் வைக்கப்பட்டார்.

## மேன்முறையீட்டு நீதிமன்ற நீதிபதிகள் மூவர் நியமனம்

மேன்முறையீட்டு நீதிமன்றத்தின் புதிய தலைவராக மூத்த கூடுதல் சொலிசிட்டர் ஜெனரல் அரசுத் தலைவர் சட்டத்தரணி நளின் ரோஹந்த அபேசூரிய நேற்றுக் காலை அரசுத் தலைவர் செயலகத்தில் அரசுத்தலைவர் அநுரகுமார திசநாயக்க முன்னிலையில் பதவியேற்றுக்கொண்டார்.

இதேவேளை, உயர்நீதிமன்ற நீதிபதி டான்பிரான்சிஸ்ஹத்துருசிங்க குணவர்தன மற்றும் உயர் நீதிமன்ற நீதிபதி ஆதித்ய காந்தா மத்தும படபெந்திகே ஆகியோரும் நேற்றுப் பதவியேற்றுக்கொண்டனர். இவர்களின் பதவியேற்பும் அரசுத் தலைவர் செயலகத்தில் அரசுத் தலைவர் முன்னிலையில் இடம்பெற்றது.

அரசுத் தலைவரின் செயலாளர் நந்திக சனத் குமநாயக்கவும் இந்நிகழ்வில் கலந்துகொண்டார்.

## காங்கேசன் – நாகை பயணிகள் சேவை 5 நாள்களின் பின் மீண்டும் தொடக்கம்




யாழ் மாவட்டம் காங்கேசன்துறைக்கும் தமிழ்நாட்டின் நாகபட்டினத்திற்கும் இடையே பயணிகள் சேவையில் ஈடுபடும் சிவகங்கை கப்பல் சேவை 5 நாள்களின் பின்னர் மீண்டும் தொடங்கப்பட்டுள்ளது. சீரற்ற காலநிலை காரணமாக இந்தச் சேவை இடைநிறுத்தப்பட்டிருந்தது.

ஜூன் 13 அன்று நிறுத்தப்பட்ட இந்தக் கப்பல் சேவை ஜூன் 18 அன்று மீண்டும் தொடங்கப்பட்டது.

இலங்கையின் உள்நாட்டுப் போர் காரணமாக 41 வருடங்களாக இடைநிறுத்தப்பட்டிருந்த இந்தியாவிற்கான பயணிகள் கப்பல் சேவை ஓகஸ்ட் 2024 இல் மீண்டும் தொடங்கப்பட்டது. இலங்கை, இந்திய அரசுகளின் ஒப்புதல் மற்றும் கடற்படை பாதுகாப்புடன் வாரத்தில் 6 நாட்கள் இந்தக் கப்பல் சேவை இடம்பெற்று வருகின்றது.

## சீன கம்யூனிஸ்ட் கட்சித் தலைவரை பெய்ஜிங்கில் சந்தித்த ரில்வின் சில்வா

சீன கம்யூனிஸ்ட் கட்சியின் அழைப்பின் பேரில், பெய்ஜிங் சென்றுள்ள ஜேவிபியின் பொதுச் செயலாளர் டில்வின் சில்வா, சீன கம்யூனிஸ்ட் கட்சியின் பொலிட்பீரோ, நிலைக்குழு உறுப்பினர்கள் மற்றும் அமைப்புத் துறைத் தலைவர் ஜி தைஃபெங் உள்ளிட்ட உயர்மட்டத் தலைவர்களைச் சந்தித்தார்.

பெய்ஜிங்கில் உள்ள மக்கள் மண்டபத்தில் இந்தச் சந்திப்பு நடைபெற்றது. இந்தச் சந்திப்பில் ஜேவிபிக்கும் சீனக் கம்யூனிஸ்ட் கட்சிக்கும் இடையிலான நீண்டகால நட்பை நினைவு கூர்ந்த ஜி தைஃபெங், கட்சி உறுப்பினர்களின் அரசியல் தத்துவார்த்த அறிவைத் தொடர்ந்து மேம்படுத்துவதன் முக்கியத்துவத்தைச் சுட்டிக்காட்டினார், மேலும் சீனா எந்த நேரத்திலும் ஜேவிபியுடன் தனது அனுபவத்தைப் பகிர்ந்து கொள்ளத் தயாராக உள்ளது என்றார்.

இலங்கையின் பொருளாதார மேம்பாட்டுத் திட்டத்திற்கு ஏற்ப தேவையான உதவிகளை வழங்கத் தயாராக சீனா இருப்பதாகவும், இந்த ஆண்டு தொடக்கத்தில் சீனாவுக்கு பயணம் செய்த அரசுத் தலைவர் அநுரகுமார திசநாயக்கவுடன் பல ஒப்பந்தங்கள் எட்டப்பட்டதாகவும் அவர் கூறினார்.

சீனாவிற்கும் இலங்கைக்கும் இடையிலான நட்பும், மக்கள் விடுதலை முன்னணிக்கும் சீன கம்யூனிஸ்ட் கட்சிக்கும் இடையிலான நட்பும் இந்தப் பயணத்தின மூலம் மேலும் வளர்ந்துள்ளதாக டில்வின் சில்வா தெரிவித்தார்.

## நல்லூர் திருவிழாவையொட்டி மாணவருக்கு கட்டுரைப் போட்டி

நல்லூர் கந்தசுவாமி ஆலய வருடாந்தத் திருவிழாவை முன்னிட்டு வருடாந்தம் நடத்தப்படும் கட்டுரைப் போட்டிக்கான ஜூன் 24 நடத்தப்படும் என்று நல்லூர் சைவத் தமிழ் பண்பாட்டு கலைக்கூடல் அமைப்பு அறிவித்துள்ளது.

இந்த அமைப்பினால் வருடந்தோறும் நடத்தப்பட்டுவரும் இந்தப் போட்டி 2025.06.24 செவ்வாய்க்கிழமை யாழ்ப்பாணம் மற்றும் வலிகாமம் கல்வி வலயங்களிற்கு உட்பட்ட பாடசாலை மாணவர்களிடையே நடத்தப்படவுள்ளது. மாணவர்கள் கல்வி கற்கும் பாடசாலைகளில் இந்தக் கட்டுரைப் போட்டி இடம்பெறும். மூன்று பிரிவுகளாகப் போட்டி இடம்பெறும்.

1. கனிஷ்ட பிரிவு -6,7,8 ஆம் வகுப்பு மாணவர்களுக்கானது - 100 சொற்கள்
2. மத்திய பிரிவு - 9,10,11 ஆம் வகுப்பு மாணவர்களுக்கானது - 150 சொற்கள்
3. மேற்பிரிவு - 12,13 ஆம் வகுப்பு மாணவர்களுக்கானது 250 சொற்கள்.

கட்டுரைகள் யாவும் மதிப்பீட்டு குழுவினரால் பரிசீலிக்கப்பட்டு ஒவ்வொரு பிரிவிலும் முதல் மூன்று சிறந்த கட்டுரைகளுக்குப் பரிசில்களும் ஏனைய 7 சிறந்த கட்டுரைகளுக்கு பாராட்டு சான்றிதழ்களும் வழங்கப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

போட்டிக்கான பரிசில்கள் மற்றும் சான்றிதழ்கள் யாவும் நல்லூர் கந்தசுவாமி கோவில் பூங்காவனத் திருவிழா நிகழும் 23.08.2025 சனிக்கிழமை காலை 09.00 மணிக்கு நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனத்தில் வைத்து வழங்கப்படும்.

காலைக்கதிர் Kalaikkathir

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: இல.551 A. கஸ்தூரியார் வீதி. யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

## நம்பிக்கையை வீழ்த்தும் நடத்தை

மாகாண சபைகள் உருவாக்கப்பட்ட நோக்கம், மாகாணங்களைச் சேர்ந்த மக்களுக்கு அருகாமையில் ஆட்சி அமைப்பை வழங்குவது மட்டுமல்லாமல், அதிகாரப் பகிர்வின் வழியாக நாட்டின் இனவழி சிக்கலுக்கு விடையளிப்பதுமாகும். இந்த முறைமை, குறிப்பாக தமிழ் மக்களின் நீண்டகால அரசியல் கோரிக்கைகளில் முக்கிய இடம் பெற்றிருக்கின்றது. ஆனால், கடந்த பத்தாண்டுகளாக மாகாண சபைத் தேர்தல் நடத்தப்படாமல் இருப்பது, அரசின் உண்மையான நோக்கத்தை கேள்விக்குள்ளாக்குகின்றது.

இதற்கு மாறாக, உள்ளூராட்சி சபைத் தேர்தல், மிகக் குறைந்த கால இடைவெளிக்கு நடத்தப்படாமல் இருந்ததற்காக, அதனை நடத்துவதில் ஆளும்தரப்பின் மிகுந்த ஆர்வமும், அதற்கான சட்ட மற்றும் நிர்வாக நடவடிக்கைகள் விரைவில் முன்னெடுக்கப்பட்டதும்தான் நாம் பார்த்திருக்கின்றோம். அதே ஆர்வத்தை மாகாண சபைத் தேர்தலிலும் காட்டாதது, அரசின் இருமுகத்தன்மையை வெளிக்கொணர்கிறது.

இது ஒரு தவறான முன்னுரிமை அமைப்பை மட்டும் காட்டுவதல்ல. மாறாக, தமிழ்மக்கள்கோரும்அதிகாரப் பகிர்வு கோரிக்கையின் அடிப்படைமேல் அரசாங்கம் கொண்டிருக்கும் எதிர்மறை அணுகுமுறையை வெளிப்படுத்துகிறது. தமிழ் மக்களின் உணர்வுகளை மதிக்காத, அவர்களது அரசியல் உரிமைகளை ஒடுக்க நினைக்கும் அணுகுமுறையே இதன் பின்னணி என எண்ணப்படும் வகையில், தேர்தல் தேதிகள் குறித்து கூட ஆளும்தரப்பில் இருந்து எந்தவொரு உறுதியும் வழங்கப்படாமல் தொடர்கிறது.

அதுமட்டுமின்றி, மாகாண சபைத் தேர்தலை நடத்துவதில் உள்ள தடைகளை மாற்றும் வகையில் தனிநபர்வர்த்தமானிஅறிவிப்பொன்றைநாடாளுமன்ற உறுப்பினர் சாணக்கியன் சமர்ப்பித்துள்ளார். ஆனால், அதனை சட்டமாக்குவதில் அரசாங்கம் மேற்கொள்ளவேண்டிய நடவடிக்கைகளை எடுப்பதில் மிகுந்த தயக்கம் காட்டப்படுகிறது. இதுவே அரசாங்கத்தின் உண்மையான நோக்கத்தை மீண்டும் ஒருமுறை சுட்டிக்காட்டுகிறது.

மக்கள் மீது பொறுப்புணர்வுடன் செயல்பட வேண்டிய அரசாங்கம், ஜனநாயகத்தின் அடிப்படை அவசியங்களான தேர்தல்களை கூட இடைமறிக்கின்றது என்ற பெருந்தொகையான விமர்சனங்கள் தற்போது முன்வைக்கப்படுகின்றன. இது அரசின் மீது மக்களுக்கு உள்ள நம்பிக்கையை சீர்குலைக்கும் என்பதில் சந்தேகமில்லை.

அதிகாரப் பகிர்வை புறக்கணிக்கும் அணுகுமுறை, இனநல ஒத்துழைப்புக்கும் நாட்டின் நலனுக்கும் விரோதமானது என்பதை ஆளும்தரப்பு உணர வேண்டும். மாகாண சபைத் தேர்தலை விரைந்து நடத்தும்உரிமைத்தன்மையையும்அரசுப்பொறுப்பையும் அரசாங்கம் ஒப்புக்கொள்ள வேண்டும்.



## வவுனியா காட்டும் வழி

**என். சத்திய மூர்த்தி**

நகரசபை மற்றும் பிரதேச சபைகளின் தவிசாளர்களையும் பிரதித் தவிசாளர்களையும் தேர்ந்தெடுப்பதில், அண்மையில் நடந்து முடிந்த போட்டிகளில் வவுனியாவில் மட்டும் அனைத்துத் தமிழ் கட்சிகளுக்கு இடையேயும் ஒற்றுமை நிலவியதாக பத்திரிகை செய்திகள் தெரிவிக்கின்றன. இத்தகைய முன்னெடுப்புகள் ஏன் பிற தமிழர்கள் பகுதிகளில் எடுக்கப்படவில்லை அல்லது செயற்படுத்தப்படவில்லை என்ற கேள்வி எழுகிறது.

வவுனியாவிலுள்ள நான்கு சபைகளுக்கும் இந்த இணக்கப்பாடு பொருந்தும். அதற்கு ஒரு காரணம், எந்த சபையிலும் எந்தவொரு அணியினருக்கும் பெரும்பான்மை கிடைக்காதது. தங்களில் ஒருவரைப் புறம் தள்ளிவிட்டு, பிற தமிழ் அணிகள் சேர்ந்தாலும் தலைமையை தேர்ந்தெடுக்கப்பட முடியாத 'நம்பர்ஸ் கேம்' இரண்டாவது காரணம்.

இந்த இரண்டு காரணங்களைவிட முக்கியமானது, அந்தந்தக் கட்சிகள் அல்லது அணிகளின் தலைமைகள் வவுனியாவில் மூக்கை நுழைக்காது விட்டமையும்கூட. குறிப்பாக, தமிழ் அரசு கட்சியின் நாடாளுமன்ற தமிழ் அரசுக் கட்சியைப் பொறுத்தவரையில் உறுப்பினர் சத்தியலிங்கம் கையில் பொறுப்பு ஒப்படைக்கப்பட்டது. இதுவே, அந்தக் கட்சி அல்லது மற்ற அணியினரின் மூத்த தலைவர்கள் அல்லது தலைமைகள் இந்த முயற்சியை முன்னெடுத்திருந்தால், அதன் முடிவு அனைவருக்கும் சாதகமாக முடிந்திருக்குமா என்பதும் சந்தேகமே.

வவுனியாவிற்கு வெளியேயும் இவ்வாறான முன்னெடுப்புகளை ஏன் இந்தக் கட்சிகள் எடுக்கவில்லை? விட்டுக்கொடுக்கும் மனப்பான்மையை ஏன் யாரும் வளர்த்துக்கொள்ளவில்லை? மாறாக, 'அடைந்தால் மாகாதேவி, இல்லையேல் மரணதேவி' என்று வீரவசனம் பேசி, ஒருவருக்கு ஒருவர் உள்வீட்டு சண்டைகளில் தலைவர்கள் ஈடுபட்டதால் மட்டும்தான், இன்னமும் தமிழர் பகுதிகளில், தமிழர் கட்சிகள், அடிமட்டம் வரை பிரிந்து செயல்படுகின்றன. அல்லது, அவர்களின் தலைமைகளால் இவ்வாறு பிரிவினைகள் செயல்படுத்தப்படுகின்றன.

### ஈகோ விளையாட்டு

இன்னும் சொல்லப்போனால், அந்தந்தத் தலைவர்களின் சுயகௌரவம் அல்லது ஈகோ விளையாட்டுகளில் மட்டுமே சிக்குண்டு தமிழ் மக்களின் உரிமைகளும் நலன்களும் தொடர்ந்து பந்தாடப்படுகின்றன. காரணம், இப்போது, உதாரணத்திற்கு தமிழ் அரசுக் கட்சியை எதிர்த்து ஒன்றுபட்டுள்ள பிற அணியினர், அந்தச் சபைகளின் காலம் முடிவதுவரை ஒருமித்து இருப்பார்களா, அந்த உறுப்பினர்கள் அவ்வாறு ஒருமித்து செயல்படுவார்களா?

இதுவரை தலைமையில் மட்டுமே ஆட்டம் போட்டு வந்த ஈகோ பிரகஸ்பதிகள், இப்போது உள்ளாட்சி முறைமையால், அந்தப் பிரிவுகளையும் பிரிவினைகளையும் அடிமட்டம்வரை கொண்டு சென்று விட்டார்கள். இதனை தொடர்ந்து மாகாண சபை தேர்தல்களை இவர்கள் எந்த இலட்சணத்தில் எதிர்கொள்ளப் போகிறார்கள் என்ற கேள்வி எழுகிறது.

கடந்த காலங்களில், தமிழ் மக்கள் பெரிதும் மதிக்கும் யாழ்பாண நகர சபையின் மேயர் பதவியை முன்னிட்டு தொடர்ந்து அரங்கேறிய நாடகங்களைதான் நாம் பார்த்திருக்கிறோம்! பார்த்து சிரித்திருக்கிறோம்! பார்த்து வேதனித்தோம்! வெட்கப்பட்டோம்! அதுவே இன்னும் பல தமிழ் சபைகளில் அரங்கேறும் அவலநிலையே தோன்றி உள்ளது எனலாம்.

இதன் ஒரு பகுதியாக, ஒரு சபையில் தற்போது தலைமை ஏற்றுள்ள ஒரு தமிழ் அமைப்பை ஒட்டியும் வெட்டியும் அதன் ஆதரவு உறுப்பினர்களுக்கு விலை பேசும் நாள் அதிக தூரத்தில் இல்லை என்றே எண்ணத்தோன்றுகிறது. அந்தப் பயம் பிடித்து, அவ்வாறு நடக்காமல் இருக்கவேண்டுமே என்றெல்லாம் இறைவனை வேண்டுவதற்கே தோன்றுகிறது. மக்களை அல்ல! மக்கள் தலைமைகளை அல்ல!

### மக்கள் தீர்ப்பு

ஒரு விதத்தில் பார்த்தால், வவுனியாவில் மட்டும் இவ்வாறான நல்ல முடிவு தோன்றுவதற்கு அங்குள்ள தமிழ் வாக்காளர்களே காரணம். நடிகர் வடிவேலு பகடியாக கூறியது போல், வவுனியாயில் உள்ள தமிழ் கட்சி தலைமைகள் அல்ல, அங்குள்ள வாக்காளர்களே ரூம் போட்டு யோசித்து வாக்களித்தார்கள் என்றே எண்ணத்தோன்றுகிறது.

அவ்வாறில்லையென்றால், வடக்கிலும் கிழக்கிலும் உள்ள பிற தமிழ் பகுதிகளிலும் உள்ளாட்சி சபைகளிலும்கூட தமிழ் அரசியல் தலைமைகளே நல்ல முடிவு எடுத்திருக்கலாம். அவ்வாறு நடந்தேறவில்லை என்ற முடிவை வைத்து பார்க்கும்போது, தற்போதைய நிகழ்வுகள் அந்தப் பகுதிகளில் உள்ள தமிழ் வாக்காளர்களின் தவறே என்று முடிவு செய்ய

தொடர்ச்சி 5ம் பக்கம் ...........

# வவுனியா.....

4ம் பக்கத் தொடர்ச்சி..........





வேண்டும். பாவம், அப்பாவி தமிழ் தலைவர்கள், அவர்கள் மட்டும் என்ன செய்துவிட முடியும்?

தற்போதைக்கு மாகாண சபை தேர்தல்களைச் சந்திக்க அரச தரப்பு தயாரில்லை என்றே தோன்றுகிறது. கடந்த சில மாதங்களாகவே, அடுத்தடுத்து மூன்று தேர்தல்களைச் சந்தித்த பின்னர், மீண்டும் நான்காவது தேர்தலையும் நடத்துவது அரசின் வளர்ச்சி பணிகளுக்கு இடையூறாக அமையும் என்று ஆளும் தரப்பினர் கூறி வந்தனர்.

தற்போது, தலைநகர் கொழும்பு மாநகரசபை உள்ளிட்ட உள்ளாட்சி அமைப்புகள் பலவற்றில், குதிரை பேரம் மூலம் மட்டுமே தலைமைத்துவத்தை பிடித்துள்ள ஜேவிபி- - என்.பி.பி கூட்டணி, மாகாண சபை தேர்தல்களில் தென் இலங்கை பகுதிகளிலேயே எதிர்பார்த்த வெற்றி கிடைக்காது என்று முடிவு செய்து விட்டார்கள் என்றே எண்ணத் தோன்றுகிறது. அது அவர்களது எண்ணம் என்றால், மாகாண சபை தேர்தல்களை உடனடியாக நடத்தாது விடுவதே அவர்களுக்கு முன் உள்ள ஒரே ஒரு தெரிவு.

## கறுப்பு ஆடு

இடையே எவ்வாறு வவுனியாவை குறிப்பிட்டு தமிழ் அணிகளின் ஒற்றுமையை வலியுறுத்துகிறோமோ, அவ்வாறே வடக்கே, வலிகாமம் கிழக்கு பிரதேச சபையின் கதையைக் கூறி தமிழர்களிடையே உள்ள கறுப்பு ஆடுகள் குறித்தும் அறிந்து கொள்ள வேண்டியது அவசியமாகிறது. தமிழ் அரசு 11, தமிழ் காங்கிரஸ் 5, ஜனநாயக தமிழ் தேசிய கூட்டணி (சங்கு அணி) 5, தமிழ் மக்கள் கூட்டணி 2 மற்றும் ஈபிடிபி 1 என்ற வகையில் உறுப்பினர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளனர்.

தமிழர் கட்சி அணிகளுக்கு வெளியே, ஆளும் தேசிய மக்கள் சக்தி 9 மற்றும் இரண்டு சுயேச்சை குழுக்கள் முறையே இரண்டு மற்றும் ஓரிடத்திலும் வெற்றி பெற்றிருந்தன. ஆனால் தவிசாளர் தெரிவில், ஈபிடிபியின் ஆதரவுடன் போட்டியிட்ட தமிழ் அரசு கட்சியின் வேட்பாளர் தனக்கு கிடைத்திருக்க வேண்டிய மொத்தம் 14 வாக்குகளில் பன்னிரெண்டை மட்டுமே பெற முடிந்தது. ஆனால், சைக்கிள்- - சங்கு கூட்டணியினர் தங்களுக்கு மொத்தமுள்ள பத்து இடங்களுக்கு எதிராக பதினைந்து வாக்குகளை பெற்று தவிசாளர் பதவியை வென்றனர்.

அதாவது, சைக்கிள்- - சங்கு கூட்டணி மூன்று சுயேச்சை உறுப்பினர்களின் வாக்குகளை பெற்றது என்று வைத்துக்கொண்டாலும், அவர்களது எண்ணிக்கை பதிமூன்றிற்குப் பதிலாக பதினைந்து ஆனாது எவ்வாறு? அதாவது, தமிழ் அரசுக் கட்சி வேட்பாளர்களுக்கு கிடைத்திருக்க வேண்டிய இரண்டு வாக்குகள் எவ்வாறு, எதிரணியினருக்கு கிடைத்தன?

அந்த வகையில், ஒரு பிரதேச சபையின் தவிசாளர் பதவிக்கே இவ்வாறு காய் நகர்த்தினால், நாளை, அனைத்துத் தமிழ் கட்சிகளும் அமைப்புகளும் கூட்டணி அமைத்து தேர்தல்களை சந்திப்பதும் இது போன்ற கூத்தில்தான் முடியும். அதன் பின்னர், யாரும் யாரையும் குறைகூற முடியாது. ஏன், தமிழ் மக்களையும் வாக்காளர்களையும்கூடக் குறை கூற முடியாது.

## ஒரு நாள் கூத்து

இதைவிடக்கொடுமைஎன்னவென்றால், வலி கிழக்கில்தவிசாளராக தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள நிரோஷ் தனது வெற்றியை 'தமிழ் தேசிய கட்சிகளின் கூட்டிணைவு ஆட்சி' என்று வேறு வர்ணித்துள்ளார். அதாவது தனக்கு வாக்களித்த தமிழ் அரசு கட்சி (வீடு) மற்றும் தமிழ் மக்கள் கூட்டணி (மான்) உறுப்பினர்களை மனதில் வைத்து, அவர்களின் ஆதரவை, அந்த கட்சிகள் 'பகுதியளவு பங்களிப்பு' என்றும் வர்ணித்துள்ளார். இது என்ன கொடுமை, சரவணன்!

இடையே வலி. வடக்கில் தமிழ் அரசு கட்சியின் பிரதி செயலாளர், அங்கு தனது கட்சியின் தவிசாளர் வேட்பாளரை ஆதரிக்க மறுத்த தனது கட்சி உறுப்பினரை வெளியேற்றுவதாகக் கடிதம் அனுப்பி உள்ளார். தற்போதைய உள்ளாட்சி தவிசாளர்கள் தேர்தல் துவங்கும் முன்னரே, கட்சி தலைமையின் கட்டுப்பாட்டை இவ்வாறு மீறுபவர்கள் உள்ளாட்சி உறுப்பினர் பதவியையும் இழப்பர் என்று அவர் பலமுறைகள் எச்சரித்திருந்தார் என்பதும் குறிப்பிடத்தக்கது.

உள்ளாட்சி அமைப்புகளைப் பொறுத்தவரையில், ஒரு கட்சி தனது சின்னத்தில் தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினரை வெளியேற்றினால், அவரது பதவி உடனடியாக வெற்றிடமாகும். பின்னர் அவர் நீதிமன்றம் செல்வது, வெற்றிபெறுவது என்பதெல்லாம் வேறு விடயம். கட்சிக்குள்ளே தனியாவர்த்தனம் வாசித்துக்கொண்டிருந்த குறிப்பிட்ட உறுப்பினரின் அரசியல் எதிர்காலம் கேள்விகுறியாகி உள்ளது.

இதுவே, தமிழர் பகுதிகளில் அங்காங்கே தோன்றி உள்ள 'குட்டி பாஸ்' தலைமைகளுக்கு தலையாட்டி, கட்சியின் கட்டளையை மீற நினைக்கும் தமிழ் அரசு உறுப்பினர்களுக்கும் பொருந்தும். கிழக்கே, திருகோணமலையின் நாடாளுமன்ற உறுப்பினர் குகதாசன் தரப்பினர் அடுத்ததாக குறி வைக்கப்படலாம் என்பதே தற்போதைய நிலைமை.

## கிடந்ததெல்லாம் கிடக்கட்டும்

இதற்கிடையே, 'கிடந்ததெல்லாம் கிடக்கட்டும், கிழவியை தூக்கி மணையில் வை' என்ற விதத்திலேயே தமிழ் அரசு கட்சியின் நாடாளுமன்ற குழு தலைவர் சிறீதரன் உள் ஒன்று வைத்து புறம் ஒன்று பேசி வருகிறார். அவருக்குத் தேவை, தனது செல்வாக்கு சிறிது பிடிபட்டுள்ள தீவு பகுதிகளில் ஈபிடிபி நிறுவனர் டக்ளஸ் தேவானந்தாவை செல்லாதாக்க வேண்டும் என்பதே.

அதற்காகவே, நாடாளுமன்ற உரையில் மண்டை தீவு பகுதியில் இனப்போர் காலகட்டத்தில் அரங்கேறியதாக கருதப்படும் படுகொலைகளில் டக்ளஸ் தேவானந்தாவிற்கும் பங்கு உண்டு என்றும், அவரையும் விசாரணை வளையத்தினுள் கொண்டு வரவேண்டும் என்றும் சிறீதரன் பேசி உள்ளார். அதில் எத்தனை தூரம் உண்மை இருக்கிறது என்பது நிரூபணம் ஆக வேண்டிய விடயம் என்பது கேள்விகுறி. ஆனால், சிறீதரனின் குற்றச்சாட்டில் உண்மை அறிதல் என்ற அடிப்படை எதிர்பார்ப்பைவிட, அரசியல் வன்மமே தலைதூக்கி நிற்கிறது.

அதேசமயம், அவர் பேசாமல் விட்டுவிட்ட 'மண்டையன் குழு' குறித்தெல்லாம் யாராவது நாடாளுமன்றத்தின்உள்ளேயோவெளியேயோ பேசினால், அதனால், அவர் சார்ந்த தமிழ் அரசுக் கட்சியின் வெளியே இருந்து அவருக்கு தார்மீக ஆதரவு அளிப்போருக்கும் தானே பிரச்சினை தோன்றும்?

அடுத்தவரை நோக்கி தனது ஆள்காட்டி விரலை சுண்டிக்காட்டும் சிறீதரன் போன்றோர், தனது கையின் உள்ளே மடக்கி வைத்திருக்கும் மூன்று விரல்கள் தன்னையே குற்றம் சாட்டுகின்றன என்பதை எப்போது புரிந்துகொள்ளப்போகிறார்கள்? எது எப்படியோ, டக்ளஸின் வாக்கு வங்கியை குறிவைத்து காய் நகர்த்துவதாக நினைக்கும் சிறீதரன் போன்றோர், அதே வாக்கு வங்கிக்காக, ஆளும் தரப்பு தன்னையே குறி வைக்கும் என்ற அடிப்படை அரசியல் உண்மையை கூட ஏன் புரிந்துகொள்ள மறுக்கிறார்கள்? இதனை தானே நாடாளுமன்றத்தில் அமைச்சர் சந்திரசேகரனும் கோடிட்டு காட்டியுள்ளார்!




காலைக்கதிர்
Kalaikkathir

## அரசு மீது....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

2017 பிப்ரவரி 20 அன்று கிளிநொச்சியில் எங்கள் தொடர்ச்சியான போராட்டம் தொடங்கியதிலிருந்து, எங்கள் போராட்டத்தில் பங்கேற்ற 300க்கும் மேற்பட்ட பெற்றோர்கள் தங்கள் குழந்தைகளின் கதி என்னவென்று தெரியாமல் அல்லது நீதி கிடைக்காமல் இறந்துவிட்டனர். நாங்களே எங்கள் வாழ்க்கையின் நாட்களை எண்ணிக்கொண்டிருக்கிறோம்.

எனவே, நாங்கள் பின்வரும் கோரிக்கைகளை முன்வைக்கிறோம்:

1. இலங்கை இராணுவத்திடம் சரணடைந்த அல்லது ஒப்படைக்கப்பட்ட நமது அன்புக்குரியவர்களின் கதியை விசாரித்து வெளிப்படுத்த அழுத்தம் கொடுக்கப்பட வேண்டும். அந்த நேரத்தில் முக்கிய சோதனைச் சாவடிகளுக்குப் பொறுப்பாக இருந்த தளபதிகளை விசாரிப்பதன் மூலம் இதைச் செய்ய வேண்டும்.

2. இலங்கையை சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்திற்கு (ICC) பரிந்துரைத்தல்:

தொடர்ச்சியான ஐ.நா. உயர் ஸ்தானிகர் அறிக்கைகளின் வலுவான பரிந்துரைகள் இருந்தபோதிலும், அவற்றில் பல இலங்கையை ஐ.சி.சி.யிடம் குறிப்பிடுவதை வெளிப்படையாகக் கூறுகின்றன, அர்த்தமுள்ளவை அல்ல.

சர்வதேச நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இலங்கையை ஐ.சி.சி.க்கு பரிந்துரைக்கும் பரிந்துரைகளுடன் இந்த பிரச்சினையை ஐக்கிய நாடுகள் சபையின் பொதுச் சபைக்கு முன் கொண்டு வருமாறு உலக சமூகத்தை நாங்கள் அழைக்கிறோம்.

3. இனப்படுகொலை நடந்த நாடுகளில், ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட சர்வதேச நடிகர்கள் சர்வதேச நீதி வழிமுறைகளின் கீழ் (எ.கா., பாலஸ்தீனம்) சட்ட நடவடிக்கைகளைத் தொடங்கியுள்ளனர். அதேபோல், சர்வதேச சமூகம் நமக்கு நீதியைப் பெற்றுத் தர முன்வர வேண்டும்.

4. தீர்மானம் 46/1 இன் கீழ், இலங்கை பொறுப்புக்கூறல் திட்டம் (SLAP) நம்பகமான ஆதாரங்களை சேகரித்து ஆவணப்படுத்தியுள்ளது மற்றும் வலுவான அறிக்கைகளை வெளியிட்டுள்ளது. இதன் அடிப்படையில், ஒரு புதிய நீதி பொறிமுறையை நிறுவி, செப்டம்பர் 2025 இல் நடைபெறவிருக்கும் மனித உரிமைகள் கவுன்சிலின் 60வது அமர்வில் ஒரு தீர்மானமாக தாக்கல் செய்ய வேண்டும். இலங்கையை சர்வதேச நீதிக்கு (ICC) முன் கொண்டுவருவதற்கான இந்த முயற்சியை அனைத்து நாடுகளும் ஆதரித்து ஊக்குவிக்க வேண்டும்.

5. எங்கள் பகுதியில் அடிக்கடி காணப்படும் புதைகுழிகள் பற்றி அறியும்போது நாங்கள் மன அழுத்தத்தில் இருக்கிறோம். இந்த புதைகுழிகள் அகழ்வாராய்ச்சி சர்வதேச விதிகள் மற்றும் விதிமுறைகளின்படியும், சர்வதேச சமூகத்தின் மேற்பார்வையின் கீழும் செய்யப்பட வேண்டும், ஏனெனில் இலங்கை அரசாங்கத்தின் மீது நாங்கள் நம்பிக்கையை இழந்துவிட்டோம். - என்றுள்ளது.

## போலி மருந்து...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மட்டுமே இருப்பதாக உறுதிப்படுத்தப்பட்டுள்ளது என்றும் சட்டமா அதிபர் அலுவலகம் நீதிமன்றத்தில் தெரிவித்தது.

இரண்டு மருந்துகளிலும் மனித ஆரோக்கியத்திற்கு தீங்கு விளைவிக்கும் பொருட்கள் இருப்பதாகச் சோதனை முடிவுகள் உறுதிப்படுத்தியதாக துணை சொலிசிட்டர் ஜெனரல் லக்மினி கிரிஹாகம மாளிகாகந்த நீதிவான் மன்றத்தில் தெரிவித்தார்.

மனித இம்யூனோகுளோபுலின் மருந்தில் சிகிச்சை கூறுகள் இல்லை, அதற்குப் பதிலாக பாக்டீரியாவால் மாசுபட்ட நீர் இருந்தது. ரிட்டுக்ஸிமாப்பில் புற்றுநோய்க்கு சிகிச்சையளிக்கும் புரதங்கள் எதுவும் இல்லை, மேலும் சோடியம் குளோரைடு மட்டுமே இருந்தது.

இந்த வழக்கில் எட்டாவது சந்தேகநபரான முன்னாள் சுகாதார அமைச்சர் கெஹெலியா ரம்புக்வெல்ல சமர்ப்பித்த அமைச்சரவைப் பத்திரத்தின் அடிப்படையில், இலங்கை ஆளும்தரப்பு இந்தக் கொள்முதலுக்காக ரூ. 144.74 மில்லியன் செலவிட்டதாக கிரிஹாகம தெரிவித்தார்.

இந்தச் சம்பவத்திற்கு கெஹெலிய ரம்புக்வெல்லவே முழுப் பொறுப்பு என்றும் முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க சம்பவம் தொடர்பாக ஓர் அறிக்கையில் கூறியுள்ளார் என்றும் லக்மினி தெரிவித்தார்.

சம்பவம் தொடர்பான விசாரணைகள் ஒரு வருடம் மற்றும் 8 மாதங்களுக்குள் முடிக்கப்பட்டு, குற்றஞ்சாட்டப்பட்டவர்களுக்கு எதிராக மூன்று பேர் கொண்ட உயர் நீதிமன்றத்தில் வழக்குத் தொடரப்பட்டதாகவும் தெரிவித்தார்.

இந்த வழக்கு நீதிமன்றத்தில் நேற்று விசாரிக்கப்பட்டபோது, தரமற்ற மருந்தைக் கொண்டு வந்ததாகக் கூறப்படும், விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள 'அய்சுலேட் பயோடெக் பாமா' நிறுவனத்தின் உரிமையாளர் சுகத் ஜனக பெர்னாண்டோவை சிறை அதிகாரிகள் நீதிமன்றத்தில் முற்படுத்தினர், அதே நேரத்தில் சம்பவம் தொடர்பாகப் பிணையில் விடுவிக்கப்பட்ட சந்தேகநபர்களும் நீதிமன்றத்தில் முற்பட்டிருந்தனர்.

## இஸ்ரேலில்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இஸ்ரேலில் உள்ள இலங்கையர்கள் இலங்கைக்கு வர விரும்புகின்றனர் என்று இன்னும் கூறவில்லை என்றும், அவர்கள் இஸ்ரேலின் பாதுகாப்பு நடவடிக்கைகளைப் பயன்படுத்துகிறார்கள் என்றும் அமைச்சர் கூறினார்.

இஸ்ரேலில் உள்ள விமான நிலையம் தற்போது மூடப்பட்டுள்ளது, மேலும் வணிக நிமித்தமாக இஸ்ரேலுக்குச் சென்ற இரண்டு பேர் இலங்கைக்கு வரவேண்டும் என்று கூறியுள்ளனர், அவர்கள் இலங்கைக்கு வருவதற்கான வசதிகள் வழங்கப்பட்டு வருவதாகவும் அமைச்சர் விஜித ஹேரத் கூறினார்.

இஸ்ரேலில் சுமார் இருபதாயிரம் இலங்கையர்கள் உள்ளனர், ஈரானில் சுமார் 35 இலங்கையர்கள் உள்ளனர் என்றும் அமைச்சர் மேலும் கூறினார்.

## கெஹலிய,....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ரூபாய் ரொக்கப் பிணையும், தலா 5 மில்லியன் ரூபாய் மதிப்புள்ள மூன்று பிணைப் பத்திரங்களையும் நீதிவான் விதித்திருந்தார். மூவருக்கும் நீதிமன்றம் பயணத் தடையையும் விதித்தது.

இதற்கிடையில், இதே வழக்கில் பிணை நிபந்தனைகளை நிறைவேற்றத் தவறியதற்காக நேற்று விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த முன்னாள் அமைச்சர் கெஹெலிய ரம்புக்வெல்ல, அவரது மனைவி மற்றும் ஒரு மகள் ஆகியோர் நேற்று சிறையிலிருந்து வெளியேறினர்.

பிணை நிபந்தனைகளை நிறைவேற்றிய காரணத்தால் அவர்களை விடுவிக்க கொழும்பு நீதிவான் மன்றம் நேற்று உத்தரவிட்டது. முன்னாள் அமைச்சரின் நெருங்கிய உறவினர் மற்றும் அவரது குடும்பத்தினரால் அவருக்கும் குடும்பத்தினருக்கும் பிணை வழங்கப்பட்டிருந்தது.

காலைக்கதிர்
ஆசிரியர்பீட
தொடர்புகளுக்கு
076 3983858
மின்னஞ்சல் முகவரி:
kalaikkathirnews@gmail.com






காலைக்கதிர்
Kalaikkathir

உ
முருகன் துணை

நல்லூர் சைவத் தமிழ்ப் பண்பாட்டுக் கலைக் கூடல்

செவ்வழி நயனம்

# சாம்பிராணித் தூபமிடல்.

சைவத்தமிழ்மக்கள் ஆலயபூசைகளின்போதும் வீட்டில் நடைபெறுகின்ற பண்டிகைகளின் போதும் பயன்படுத்தும் புனிதம் நிறைந்த பொருட்களில் சாம்பிராணியும் முக்கியம் பெறுகின்றது.

பண்டைய காலம் முதல் மத வழிபாட்டுக்கும் மற்றும் பல்வேறு மருத்துவ தேவைகளுக்கும் சாம்பிராணி பயன்பட்டு வருகின்றது.

சாம்பிராணி –குமஞ்சம், குங்கிலியம், மரத்து வெள்ளை,பறங்கிச்சாம்பிராணி,பால்சாம்பிராணி,வெள்ளைக் கீரை. எனப் பல்வேறு பெயர்களாலும் அடையாள படுத்தப் படுகின்றது.

சாம்பிராணி பிரங்கின்சென்ஸ் (FRANKINCENSE) எனும் மரத்தில் இருந்துபெறப்படும் பால் அல்லது பிசின் மூலம் உற்பத்தியாகின்றது.

இந்த மரம் பாஸ்வெல்லியா செர்ராட்டா (BOSWELLIA SERRATA). என்ற தாவர வகையைச் சேர்ந்ததாகக் கூறுவர்.

இந்த மரங்களில் இருந்து பெறப்படும் பால் மெதுவாக இறுகி ஒளி புகும் தன்மையும் எளிதில் எரியும் தன்மையும் கொண்ட சாம்பிராணி ஆகின்றது. அது எரியும் போது வெளிவரும் புகை நறுமணம் கொண்டதாக இருப்பதுடன் எம்மைச் சூழ்ந்துள்ள வளியில் சூழல் மாசுறுவதால் ஏற்படக் கூடிய பக்டீரியாக்களை அழிக்கக் கூடிய இயல்பினையும் கொண்டுள்ளது.

மேற்கூறிய சாம்பிராணி மரங்கள் மேற்கிந்திய நாடுகளிலும், இந்தியாவில் குஜராத்,அஸ்ஸாம், ராஜஸ்தான்,பிகார்,ஒரிசா,மற்றும் தமிழ் நாட்டின் சில பகுதிகளிலும் காணப்படுகின்றன

இந்த சாம்பிராணி மரங்கள் உறுதியானவை.ஆனாலும் அவற்றைஅரிந்துபயன்படுத்திக்கொள்வது இலகு.அதனால் இம்மரங்களில் இருந்து பாலினைப் பெற்று சாம்பிராணி உற்பத்தி செய்வதுடன் தீக்குச்சி உற்பத்தி செய்வதற்கும் அம்மரங்கள் பயன்படுகின்றன.

இவ்வகை மரங்களில் 30 தொடக்கம் 50 வருட வயது கொண்ட மரங்களில் இருந்து தான் பாலினைப் பெற்று சாம்பிராணி உற்பத்தி செய்து கொள்ள முடியும்.அதற்கு முன்னும் பின்னும் பால் பெறுவது கடினம்.அதனால் அவற்றைத் தேடிஉயரமான பகுதிகளுக்குச் செல்ல வேண்டிய தேவையும் ஏற்படலாம்.

மேலும் இம்மரங்களின் மூலம் கார்த்திகை மாதத்தில் இருந்து ஆடி மாதம் வரையுமே அதிக பால் பெறமுடியும் என்பதால் இக்காலத்திலேயே அதிக சாம்பிராணி உற்பத்தியாக முடிகின்றது.

இந்தச் சாம்பிராணியை தீக்கனலில் இட்டு தூபமிடும்போது, நறுமணம் மிக்க புகை கிளம்பும்.அது வளியில் கலந்து அதனைச் சுத்தமாக்கி தூய்மையான காற்று வீச வைக்கின்றது.

இவ்வாறு இயற்கையாகப் பெறப்படும் சாம்பிராணியே தூபமிடும் போது மனிதர்களின் சுவாசத்துக்கு ஏற்றதாகவுள்ளது.



செயற்கையான இரசாயனத் தூபம் கலப்படமானது.மனிதர்களுக்கு ஆபத்தினைத் தரவல்லது.

சாம்பிராணித் தூபமிடுவதால் ஏற்படும் நன்மைகள் சில.

–சாம்பிராணித் தூபமிட்டுப் பிரார்த்தனை செய்தல் ஹோமம் செய்து வழிபடுவதற்கு ஒப்பானது.

–சாம்பிராணித் தூபமிடுவதால் கண்திருஷ்டி விலகுகின்றது.மற்றவர்களால் கொள்ளப்படும் பொறாமை உணர்வும் அகற்றப்படுகின்றது.

–சூழல் நறுமணம் கொள்வதுடன், அங்கு புனிதம் நிறைந்த தெய்வீகத் தன்மை பெருகுகின்றது.

–சாம்பிராணித் தூபமிடுவதால் குழந்தைப் பேறு கிடைக்கும் என்றும் நம்பு –கின்றார்கள்.

–சாம்பிராணியை எப்பொருளுடன் கலந்து தூபமிட்டால் எவ்வகைப் பலன் கிடைக்கும் என்றும் முன்னோர் வகுத்து வைத்துள்ளனர்.

அதன்படி....

–சாம்பிராணியைத் தூதுவளையுடன் கலந்து தூபமிடின் தெய்வ அருள் நிறைவாகத் தித்திக்கும்.

–சாம்பிராணியைச் சந்தனத்துடன் சேர்த்துத் தூபமிடின் இலட்சுமி கடாட்சம் கிடைக்கும்.

–சாம்பிராணி அருகப்புல்லுடன் சேர்ந்து தூபமிடும்போது தோஷங்கள் நிவர்த்தியாகும்.

–சாம்பிராணியும் வெட்டிவேரும் கலந்து தூபமிடும்போது காரியசித்தி பெறலாம்.

–சாம்பிராணியும் வேப்பிலையும் சேர்த்து தூபமிடும்போது நோய்நிவாரணம் தரும் .

–சாம்பிராணியும் வெண்கடுகும் சேர்த்து தூபமிடின் பகை விலகும்.

–சாம்பிராணியும் காய்ந்த துளசியும் கலந்து தூபமிடும்போது காரியத் தடை நீங்கும்.

சித்தர்கள் அருளிய மூலிகைச் சாம்பிராணி



மேற்கூறிய இயற்கை சாம்பிராணியைவிட சித்தர்கள்,தீய சக்திகள் விலகி நல்ல சக்திகள் பெருகி மனித வாழ்வு மேம்படஇயற்கைமூலிகைச் சாம்பிராணியையும் எமக்கு அறிமுகம் செய்துள்ளார்கள்.

அது ஒரு சர்வலோக நிவாரணியென சிறப்பித்துக்கூறப்படுகிறது.. வீட்டில் உள்ள சகல பிரச்சனைகளையும்தீர்த்து சுபீட்ஷ வாழ்வளிக்கும் வல்லமை கொண்டது அது என்பர்.

இத் தூபமிடுவதால் வீட்டில் நல்ல சக்திகள் நிலைத்து நிற்கும்.வியாபார நிலையங்களில் வியாபாரம் பெருகும்.வீட்டில் பிரச்சனைகள் ஏற்படமாட்டாது. வாழ்க்கையில் நிம்மதி நிலவும்.நோய் அணுகா.நிம்மதியான தூக்கம் கிடைக்கும். விஷ ஜந்துக்கள் அகலும்.சூழவுள்ள வழியை தூய்மையாக்கி நல்ல காற்றை வீசவைக்கும். இந்த மூலிகைச் சாம்பிராணித் தூபத்தில் முக்கியமாக ஏழு பொருட்கள் அடக்கப் படவேண்டும் என்று சித்தர்கள் வகுத்துள்ளார்கள்.அவை... 1.வெண்கடுகு , 2.நாய் கடுகு (இரண்டும் வைரவ சுவாமிக்குரியது) 3.மருதாணி விதை (திருமகளுக்குரியது) 4.அருகம்புல் பொடி (விநாயகருக்குரியது)5. வில்வம் பொடி,6.வேப்பம் பொடி( சிவனுக்கும் சக்திக்கும் உரியது) 7.குங்கிலியம்

இவற்றைப் பொடியாக்கிக் கலந்து வாரத்துக்கு மூன்று தடவை தூபமிட்டுவரின் ஐஸ்வர்யம் கிடைக்கும்.வாரத்தில் சாம்பிராணித் தூபம் இடும் நாட்களைப் பொறுத்து விஷேட பலன்கள் கிடைப்பதையும் முன்னோர் பதிவு செய்துள்ளார்கள்.

ஞாயிற்றுக்கிழமை

–ஆத்மபலம்,செல்வாக்குச் சிறப்பு,புகழ் உயர்ச்சி. ஈஸ்வரன் அருள் பாலிப்பார்.

திங்கட்கிழமை

–தேகமன ஆரோக்கியம். மன அமைதி. அம்பாள் அம்பாள் அருள் கிடைக்கும்.

செவ்வாய்க்கிழமை

–திருஷ்டி கழியும்,எதிரிகள் தொல்லை நீங்கும். முருகன் அருள் புரிவார்.

புதன்கிழமை

–வியாபாரத்தில் வெற்றி,நல்சிந்தனை வளர்ச்சி. சுதர்சன் அருள் கிடைக்கும்.

வியாழக்கிழமை

–சகல சுபபலன்,சித்தர் பெரியோர் ஆசி பெறலாம், குருபகவான் அருள் தித்திக்கும்.

வெள்ளிக்கிழமை

–லட்சுமி கடாட்சம் பெறலாம்.ஐஸ்வரியம் பெருகும். இலட்சுமி அருள் கிடைக்கும்.பொதுவாக அனைத்து தெய்வங்களுக்கும் உரிய நாள்.

சனிக்கிழமை

–உடல்,உள சோம்பல் நீங்கும்,துன்பங்கள் நீங்கும். பைரவர்,சனிபகவான் அருளுக்குரியது.

பாறை போன்று இறுகியிருக்கும் சாம்பிராணி தீயில் பட்டவுடன் உருகிப் புகையாகி, வளியில் பரவிக் காணாமல் போய்விடுகின்றது

அது போன்று எமது துன்பங்களும் சாம்பிராணித் தூபமிட்டுப்பிரார்த்திக்க விலகி மறையும் என்பது நம்பிக்கை.

**செழியன்**
**அவுஸ்திரேலியா**


முல்லை ஓய்வு நகர்
Mullai Rest City
எழுதுமட்டுவாழ் நகரில்
2 பரப்பு, 4 பரப்பு காணிகள் விற்பனைக்கு!
இயற்கையான சூழலில் உங்களின் ஓய்வுகாலத்தினை மகிழ்ச்சியாகவும் ஆரோக்கியத்துடனும் வாழுங்கள்!
உங்களுக்கு விரும்பியவாறு வீடுகளை அமைத்துக்கொள்ளலாம்.
மாசற்ற இயற்கையான சூழல் – பாரம்பரிய முறையிலான வாழ்க்கை – ஆரோக்கிய நிலையங்கள்
அத்தியாவசிய தேவைகள் அனைத்தும் அருகில் – பொழுதுபோக்கு அம்சங்கள்
முதியோர் பராமரிப்பு வசதி – தியான மண்டபம் – மூலிகைத்தோட்டத்துடன் மூலிகைக் குளியல்
அறிவார்ந்த நூல்கள் அடங்கிய நூலகம் – உள்ளூர் வானொலிச் சேவை
ஒன்றுகூடல் நிலையம் – பாரம்பரிய உணவகம் – பல்பொருள் அங்காடி
சுத்தமான குடிநீர் விநியோகம் – யோகா நிலையம்
விருந்தினர் விடுதி – சிறுவர் பூங்கா
ஆயுள்வேத சிகிச்சை நிலையம்
மீன்பிடி குளம் – தாரா பண்ணை
பூங்கா – நடைபயிற்சிப் பாதை – உடற்பயிற்சிக் கூடம்
உள்ளக விளையாட்டுத் தொகுதி – விளையாட்டு மைதானம்
SUPERMARKET
4th Project
இது ஒரு கற்பகவனம் செயற்திட்டம்
Good Gift Property Developers (Pvt) Ltd
தொடர்புகளுக்கு: 0777 43 5557


Study
MBBS
in China
SLMC APPROVED
Dalian Medical
University
YOUR PATH TO WORLD CLASS MBBS
JDR HEALTH CARE PVT[LTD]
SEPTEMBER 2025
ADMISSION
OPEN
CONTACT US
FOR ADMISSION
0701348384







இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.551 A, கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House (Pvt) Ltd.நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 20.06.2025இல் வெளியிடப்பெற்றது